2005 பிப்ரவரி 3]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 26, திரு. டி. மணி, மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

26—

விற்பனை வரியை ரத்து செய்தல்

***59910—திரு. டி. மணி:**

மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்ட தேன் உற்பத்தியாளர்களிடமிருந்து தேன் கொள்முதல் செய்யும் சிறு வியாபாரிகள் அரசுக்கு விற்பனை வரி செலுத்துவதை ரத்து செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேன் உற்பத்தியாளர்கள் மற்றும் சிறு வணிகர்கள் விற்பனைத் தொகை வரி விதிப்பிற்கு குறைவாக உள்ளபடியால், வரி ஏதும் செலுத்தவுமில்லை; வரி வசூலிக்கப்படவுமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(துணை வினா இல்லை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 27, திருமதி காசாம்பு பூமாலை, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

27—

சுற்றுலாத் தலம்

***39572—திருமதி காசாம்பு பூமாலை:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் தொகுதியிலுள்ள கல்வராயன்மலை மற்றும் பெரியாறு நீர்வீழ்ச்சியைச் சுற்றுலாத் தலமாக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

சத்யமேவ ஜயதே TRUTH ALONE TRIUMPHS